**கவனிக்க.**– 2006.06.02 ஆந் திகதிய பகுதி IV (அ) மற்றும் IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1449 - 2006 ජූනි 09 වැනි සිකුරාදා - 2006.06.09

1449 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 518 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 521 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூன் 16 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, யூன் 02 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:***

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களிஹுடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

4-B 079269

# பதவிகள்-வெற்றிடம்

## இலங்கை தொண்டர் விமானப் படை

வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள்

இலங்கை தொண்டர் வான் படையில் இயக்குனர் மோட்டார் போக்குவரத்து (சாரதி) தொழில் துறையில், வான்படை வீரர்களுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன.

*1.* (அ) **கல்வித் தகைமைகள்.**- *இயக்குனர் மோட்டார் போக்குவரத்து (சாரதி).*- குறைந்தபட்சம் எட்டாம் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும்பொழுது பாடசாலையில் விலகியதற்கான சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு வருட கால அனுபவத்துடன் அதிபார வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் கட்டாயமாக இருத்தல் வேண்டும். மேலதிகமான கல்வித் தகைமைகள் இருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

(ஆ) **ஏனைய தகைமைகள்.**- இலங்கை தொண்டர் வான்படையில் இணைவதற்குப் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(1) *தேசிய இனம்.*- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(2) *வயது.*- 2006, யூன் 30 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;
(3) *உயரம்.*- 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும் ;
(4) *குடியியல் நிலை.*- விவாகமான/ விவாகமாகாத இரு பிரிவினரும் விண்ணப்பிக்க முடியும். விவாகமாகாத விண்ணப்பதாரிகள் வான்படையில் இணைந்து ஓராண்டு பூர்த்தியடையும்வரை விவாகம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

2. பந்தி 01 (அ) இல் தேவைப்படும் கல்வித் தகைமைகள் அல்லது இதற்குச் சமமான தகைமைகளைக் கொண்டிராதவர்களும் பந்தி 01 (ஆ) இல் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், கண் பார்வை பரீட்சிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட வயது, உயரம், கல்வித் தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

3. விளையாட்டுத் துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற்கொள்ளப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்.**- (அ) வான்படை வீரர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படைச் சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் வான்படை வீரர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டு, அவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

5. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள்.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் (மூன்றாம் தர) வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். இது தொடர்பான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளுமாறு கேட்கப்படுவார்கள். 05 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

6. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :** (அ) *சம்பள விகிதங்கள்.*- ஒரு வருடத்திற்கு வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக திரட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் பின்வருமாறு-

*வானூர்தியாளர்.- ரூபா 1,44,240-7X1,440-10X1,800- ரூபா 1,72,320.*
*முன்னணி வானூர்தியாளர்.- ரூபா 1,48,380-4X1,440-11X1,800- ரூபா 1,73,940.*
*கோப்ரல்.- ரூபா 1,52,400-1X1,440-13X1,800-ரூபா 1,77,240.*

மேற்குறிப்பிட்ட சம்பள திரட்டு விகிதங்களுக்கு ஏற்புடையதாக சம்பள கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேவைக்காலத்தில் அவரவர் நன்னடத்தை, சேவை ஆற்றல் ஆகியவற்றிற்கிணங்க உயர்நிலைகள் கிடைக்கப்பெறுவதுடன் அதற்கிணங்க சம்பள விகிதங்களும் திருத்தப்படும்.

(ஆ) *வேறு கொடுப்பனவுகள் :*

(1) வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 1,000.
(2) கடினப்படி.- மாதமொன்றுக்கு ரூபா 600.
(3) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 1,900 வழங்கப்படும்.
(4) விசேட கடினப்படி.- விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,400 வழங்கப்படும். யாழ். குடாநாட்டில் சேவையாற்றுபவர்களுக்கு ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 80 வீதமும் வழங்கப்படும்.
(5) உணவு கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரருக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,649.75 (உள்ளே தங்கும் வான்படை வீரருக்கு இலவச உணவு வசதி).
(6) தங்குமிட வசதி.- உள்ளே தங்கும் வான்படை வீரருக்கு இலவசம்.
(7) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரருக்கும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்). உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப்பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலவின மீளளிப்பு.
(8) கலவரகாலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர், விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்).
(9) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம்.- மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30 இலிருந்து ரூபா 204 வரை வழங்கப்படும்.

(10) சீருடைக் கொடுப்பனவு.- மாதமொன்றுக்கு ரூபா 170 வழங்கப்படும்.

(11) மருத்துவம்.- வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பங்களுக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்யப்படும்.

(12) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தலத்திலிருந்து 30 மைல் (கி. மீ. 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ. போ. ச. பேரூந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச்சீட்டு வழங்கப்படும்.

(13) விவாகமான வான்படை வீரருக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு ரூபா 1,100 இல் இருந்து 3,000 வரை வாடகைப்படியொன்றுக்கு உரித்துடையவராவர்.

(14) வேறு கொடுப்பனவுகள்.- (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்) இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

**7. விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தமது கை எழுத்தினால் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2006, யூன் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "தலைவர், ஆள்திரட்டற் சபை, இலங்கை வான்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத்தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொண்டர் வான்படையில் தொண்டர் வான்படை வீரர்களுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில்/ குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பக்காரர்களது விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத்தின்/சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப் படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பக்காரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :

(1) பிறப்புப் பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதார மான சான்றிதழ்.

(3) சாரதி அனுபவத்துடன் அதிபார வாகனம் ஓட்டுவ தற்கான அனுமதிப்பத்திரம் கட்டாயமாவதுடன் சாரதி அனுபவத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக சான்றிதழ் ஒன்றை முன்வைத்தல் வேண்டும். தொழில்நுட்பப் பயிற்சி அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ் முன்வைத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(4) அண்மையில் பெற்ற இரண்டு நற்குணச் சான்றிதழ் களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பக்காரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பக்காரரின் தொழில் தருநரிடமிருந்து (தொழில் புரிவாராயின்).

(5) விளையாட்டுத்துறை அல்லது கெடெற்றிங் முதலிய வற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(உ) ஆவணங்களோ ஆவணங்களின் பிரதிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சான்றிதழ்களின் எவையேனும் மூலப்பிரதிகள் அனுப்பப்படின் அவை காணாமற் போனமைக்கு வான்படை பொறுப்பல்ல.

8. நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்தவரெனக் கருதப்படும் விண்ணப்பக்காரர்கள் விமானப்படை ஆள் திரட்டற் சபையொன்றின் முன்னிலையில் தங்கள் சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சைகள் இலங்கை வான்படை, ஏக்கல நிலையத்தில் நடைபெறும்.

9. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப் படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய ஆளடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய ஆளடையாள அட்டை வைத்திராத விண்ணப்பக்காரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பக்காரரும் தேசிய ஆளடையாள அட்டையின்றி சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்.

10. தங்கள் இறுதி நேர்முகப் பரீட்சைகளையடுத்து பொருத்த மானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பக்காரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பக்காரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தெரிவுசெய்யப்படுவர்.

11. விண்ணப்பக்காரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பக்காரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தனித்தல் அத்தகைய விண்ணப்பக்காரரை தகைமையிழக்கச் செய்யும்.

12. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்குமுன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பக்காரரை ஆளாக்கிவிடும்.

13. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பக்காரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

ஜி. டீ. பெரேரா,
எயார் மாஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தொண்டர் வான்படையில் இயக்குநர் மோட்டார் போக்குவரத்து (சாரதி) வான்படை வீரர் பதவி**

1. முழுப்பெயர் :----.
(தேசிய அடையாள அட்டைப்படி)
2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
3. அஞ்சல் முகவரி :----.
4. நிரந்தர முகவரி :----.
5. நிரந்தர முகவரியின் பொலிசு நிலையம் :----.
6. மாவட்டம் :----.
7. தேர்தற் தொகுதி :----.
8. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
9. தொலைத்தொடர்பு இலக்கம் :----.
10. பிறந்த திகதி :----.
ஆண்டுகள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
வயது :
(2006, யூன் 30 ஆந் திகதி அன்று உள்ளவாறு வயது)
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
11. விவாகமானவரா/விவாகமாகாதவரா :----.
12. உயரம் :
அடி :----, அங்குலம் :----.
13. இறுதியாக சித்திபெற்ற கல்வித்தரம் :----.
14. க. பொ. த. (சா. த.) பரீட்சை :

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

15. க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| ஆண்டு | மாதம் | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

16. (அ) தொழில்துறை சம்பந்தமான விசேட தகைமைகள்
(உதாரணம் :- பெற்ற தொழினுட்ப பயிற்சிகள்) :----.

(ஆ) தொழில்துறை அனுபவம் :

| சாரதியாக பெற்ற அனுபவம் | சேவை செய்த காலம் | சேவை செய்த நிலையத்தின் தலைவருடைய பெயரும் முகவரியும் |
|---|---|---|
| | | |

17. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விவரம் : ----.
18. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.
19. ஆயுதப் படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விவரங்கள் தரவும் :----.
20. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.
21. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

22. விண்ணப்பக்காரரால் கையொப்பமிட வேண்டிய வெளிப்படுத்துகை :

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பக்காரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக் கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :----.

6-203

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## தொழில் முன்னேற்றத் திட்டம்

தொலைக்கல்லி நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் (DEMP)

*(ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்படுகிறது)*

**க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர்கள், ஆக்கபூர்வமான தொழிலில் ஈடுபடுத்துவதற்கான பயிற்சி வேலைத்திட்டம்**

மேற்படி வேலைத்திட்டத்தில் இணைந்துகொள்வதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் குறிக்கப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் கீழே குறிப்பிடப்படும் மாதிரி விண்ணப்பத்திற்கமைய தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.

2003, டிசெம்பர் மாதம் முதல் கல்வியமைச்சால் மேற்படி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் திட்டப் பணத்தின் ஒரு பகுதியானது க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி வேலை தேடும் இளைஞர்கள் ஆக்கபூர்வமான தொழிலில் ஈடுபடுத்துவதற்கான குறுகிய கால பயிற்சிப் பாடநெறியை (3 - 4 மாதங்கள்) நடத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயிற்சியின் பின் தொழிலை இலக்காகக் கொண்டு அதற்காக தொடர்புடைய அரைத் தேர்ச்சி தேவைப்படுபவர்கள் மற்றும் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கமாய்க் கொண்டு பயிற்சி வேலைத்திட்டம் /பாடநெறி (3 - 9 மாத கால எல்லை) தயாரிக்கப்படும். இதன் பிரகாரம் தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் குறுகிய கால பியற்சிகள் மற்றும் சொல்லப்பட்ட நிறுவனத் தொழில் தேவை கருதி, தேர்ந்தெடுக்கப்பட்ட க. பொ. த. உ.த. பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு சேவைப் பயிற்சி வழங்குவதற்கும் பயிற்சியின் பின் அவர்களைத் தொழில்களில் அமர்துவதற்கு விருப்பமுள்ள அரச அல்லது தனியார் நிறுவனங்களில் இவ்விளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொழிலற்ற பொருளாதாரக் கஷ்டத்திற்கு மத்தியில் க. பொ. த. (உயர்தரம்) கற்றுப் பாடசாலையிலிருந்து விலகிச் செல்வோருக்கு உதவும் முகமாய் சேவைப் பயிற்சிக் காலத்தின்போது மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்படும். 3 - 9 மாத காலப் பயிற்சியின்போது வழங்கப்படும் இக்கொடுப்பனவானது விண்ணப்பதாரிகள் தமது உணவு, தங்குமிடம் போக்குவரத்து போன்றவற்றிற்கான செலவுக்குப் பயன்படுத்தலாம். எனினும் தொழிலை நோக்கமாகக் கொண்ட குறித்த/ தேவைக்கேற்ற பாடநெறியைப் பின்பற்றுபவர்களுக்கு பாடநெறிக் கட்டணம் மட்டும் செலுத்தப்படுவதோடு வேறெந்த மாதாந்த கொடுப்பனவும் செலுத்தப்படமாட்டாது.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) விண்ணப்பதாரிகளின் குடும்ப மாதாந்த வருமானம் ரூ. 10,000 இற்குக் குறைவாயிருத்தல் வேண்டும். (பிரதேச செயலாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கிராம சேவையாளர் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.)

(ii) விண்ணப்பதாரிகளின் வயது 2005, திசெம்பர் 31 இற்கு 22 இற்குக் குறைவாயிருக்க வேண்டியதோடு 2004/2005 க. பொ. த. (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றி வேலை வாய்ப்பின்றியிருத்தல் வேண்டும்.

(iii) 2004, யூலை 03 ஆந் திகதி இது சம்பந்தமாய் பிரசுரிக்கப் பட்ட விளம்பரப் பிரகாரம் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

(iv) தற்போது பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரிகள் மற்றும் தனியார் அல்லது அரச மூன்றாம். நிலைக்கல்வி நிறுவனங்களில் முழுநேர அல்லது பகுதி நேரப்பட்டப் படிப்பு டிப்ளோமா அல்லது சான்றிதழ் நெறிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்படலாம் என அனுமானிப்பவர்களும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

(v) இவ்வேலைத்திட்டத்தின் கீழ் தொலைக்கல்வி நவீனமயப் படுத்தும் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுபவர்களும் மேலே குறிப்பிடப்படும் தொழில்சார் பயிற்சிக்கு அல்லது தொழிலை நோக்கமாகக் கொண்ட குறித்த/தேவையுள்ள பயிற்சியுடன் தொடர்புடையதாய் தேர்ந்தெடுக்கப்படின் அது சம்பந்தமாய் ஏற்படும் செலவு மற்றும் பாடநெறியில் தொடர்ச்சியாகக் கலந்து கொள்வது சம்பந்தமாய் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும்.

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிடப்படும் *மாதிரி விண்ணப்படிவத்துக்கு* அமையத் தயாரித்து தேவையான ஆவணங்களுடன் 2006.07.15 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாய் விலாசத்திற்கு அனுப்பப்படல்வேண்டும்-

**அவ்விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மட்டும் தயாரிக்கப்படுவது கணனித்தரவு வங்கியில் பதிவு செய்யும் போது ஏற்படும் அசௌகரியங்கள் மற்றும் தவறான தகவல்கள் பதிவுசெய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகவாகும்.**

திட்டப் பணிப்பாளர்,
தொலைக்கல்வி,
நவீனமயமாக்கல் திட்டம் (DEMP),
35/10, முதலாவது மற்றும் இரண்டாவது மாடி,
நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.

*மாதிரி விண்ணப்பப்படிவம் (ஆங்கிலத்தில்)*

**CAREER DEVELOPMENT PROGRAMME**

*Distance Education Modernization Project*

**MINISTRY OF EDUCATION**

**Application for Training Programme leading to gainful Employment of young needy GCE (A/L) Completers**

01. Name in Full :————.
02. Permanent Address :————.
 Address Line 1 :————.
 Address Line 2 :————.
 Address Line 3 :————.
 City :————.
 2(a) District :————.
 2(b) Grama Niladhari Division :————.
03. Telephone :————. (if any)
04. Mobile :————. (if any)
05. Fax :————. (if any)
06. E-mail :————.(f any)

07. Family Income :————.
08. Grama Niladari's Letter (GN Division and No.) certified by Divisional Secretary (DS Division) :————. (Y/N)
09. Tempoary Address :
Address Line 1 :————.
Address Line 2 :————.
Address Line 3 :————.
City :————.
09(a) District :————.
09(b) Grama Niladhari Division. :————.
10. Telephone :————. (if any)
11. Mobile :————. (if any)
12. Fax :————. (if any)
13. E-Mail :————. (if any)
14. Date of Birth :
Date :————, Month :————, Year :————.
(Attach a copy of BC)
15. Age as at 31.12.2005 :————.
16. Gender (M/F) :————.
17. Marital Status : (Married/Single)
18. NIC No. :————. (Annex copy)
19. Date of Issue :
Date :————, Month :————, Year :————.
20. Passport No. :————.
(Annex Copy)
21. Date of Expiry :
Date :————, Month :————, Year :————.
22. Nationality :————.
23. Race :————.
24. Preferred Categories of Employment :
Only 5 categories can be selected Please specify the Preference Level (1 to 5)

*Example :*

| *Category* | *Sub Category Pref. (Please specify)* |
|---|---|
| Accountancy | Auditor 1 |
| Tourism and Hotel | Room Boys 2 |

| *Category* | *Sub Category Pref. (Please specify)* |
|---|---|
| | |
| Accountancy | |
| Agriculture and Livestock | |
| Mechanical Production | |
| Automotive/Building and Construction | |
| Computer and Information Tech. | |
| Electrical and Electronics Fisheries | |
| Food and Beverages | |
| Gem and Jewellery | |
| Handicraft and Cottage Industry | |
| Marine and Shipping | |
| Metal and Light Eng. | |
| Personal and Community Development | |
| Printing and Packaging | |
| Rubber Plastics and Leather related | |
| Textile and Garment | |
| Wood related | |
| Tourism and Hotel | |
| Other | |

25. Indicate in which districts you would like to undergo Training :
(List 03 Districts in order of priority)
(i) ————.
(ii) ————.
(iii) ————.

26. Educational Qualification :
(Indicate your best grading only for **Mathematics** and **English**)

| *G. C. E. (O/L)* | *Subjects (Annex copy)* | *Grade* |
|---|---|---|
| Year 19……… | Mathematics<br>English Language | …………<br>………… |

G. C. E. (A/L)
*Stream :* Commerce/Mathematics/Science/Arts (Pls. Highlight)

| | *Subjects (Annex copy)* | *Grades* |
|---|---|---|
| Year 19… First Sitting | 1. ……………<br>2. ……………<br>3. ……………<br>4. …………… | …………<br>…………<br>…………<br>………… |
| Year 19… Second Sitting | 1. ……………<br>2. ……………<br>3. ……………<br>4. …………… | …………<br>…………<br>…………<br>………… |
| Year 19… Third Sitting | 1. ……………<br>2. ……………<br>3. ……………<br>4. …………… | …………<br>…………<br>…………<br>………… |

27. Training programmes and courses attended after completing GCE (A/L) :

| *Name of Institution* | *Course Title* | *Year* | *Duration* | *Grade Awarded* |
|---|---|---|---|---|
| ………<br>………<br>………<br>……… | ………<br>………<br>………<br>……… | ………<br>………<br>………<br>……… | ………<br>………<br>………<br>……… | ………<br>………<br>………<br>……… |

28. Additional Information :

| *Language Proficiency* | *Spoken* | *Reading* | *Writing* |
|---|---|---|---|
| English | ……… | ……… | ……… |
| Sinhala | ……… | ……… | ……… |
| Tamil | ……… | ……… | ……… |
| Other | ……… | ……… | ……… |

*(Please specify* - Excellent, Very Good, Good, Fluent, Fair, Poor)

29. Employment History (If relevant) :

| *Employer* | *Designation* | *Duration Period* | *EPF No.* | *Job Responsibilities* |
|---|---|---|---|---|
| ......... | ......... | ......to...... | ......... | ......... |
| ......... | ......... | ......to...... | ......... | ......... |
| ......... | ......... | ......to...... | ......... | ......... |
| ......... | ......... | ......to...... | ......... | ......... |

Other relevant Information :

30. Whether receiving grants already (Y/N) :————.
If "Y", Name of the grant and amount/month
31. Physical Fitness :————. (Y/N)
(Certified by Physician)
32. Letters of Guarantors :————.
32.1 Parents :————. (Y/N) (if parents are dead pl. give details of close relative who would agree to be a guarantor)
Name (father/mother) :————. NIC No. (If available).
address :————.
32.2 Govt. Officer :————. (Y/N) (The Government Officer could also be a retired person) :
Name :————.Position (held) :————.
NIC No. :————.Salary Scale :————.
Address :————.Tele. No. :————.

***For Office use only***

01. Reference. No. :————.
02. Date Received :
Date :————. Month :————. Year :2006
03. Officer's Name :————.
04. Recommended/Not Recommended :————.
05. Reasons for (4) above :————.
06. Employment Prospects identified :————. (Y/N)
07. Approval Granted by :————.
08. Valid From :————.
09. Rejected:————. Date :
Date :————. Month :————. Year :————.
10. Reasons for Rejection :————.
11. Others :————.
12. Authorized by :————.
13. Date :————. Month :————. Year :————.

6–185

---

**பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு**

பதிவாளர் நாயகம் திணைக்களம்

**பதிவாளர் சேவையில் தரம் II பதவிகட்கு ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான போட்டிப் பரீட்சை**

(COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO THE POST OF REGISTRARS
Grade II of the Registrar Service)

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் தரம் II பதிவாளர் பதவிகளுக்காக ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சையின் பொருட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன ;-

2. **பரீட்சை.**- 2006, செத்தெம்பர் மாதத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அமைவாக பதிவாளர் சேவையின் II ஆம் தரத்திற்கான பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவர்:

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித்துடையதாகும். தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படும் விண்ணப்பதாரிகள் விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தாப்பணம் செலுத்த வேண்டும். அத்துடன் காலா காலத்திற்கு அமைவாக பதிவாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பிணையினையும் வைப்பிலிட வேண்டும். தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு கட்டுபடுதல் வேண்டும். 2003.01.01 ஆந் திகதி அல்லது அதற்கு பின் முதன் முதலாக இப்பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படும் அலுவலரொருவர் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் வீதத்தின்படி ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தாப்பணம் செலுத்த வேண்டும் ;

(ii) அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் புதிய அலுவலர்கள் மூன்று வருட (03) தகுதிகாண் சேவைக்கு உட்படுத்தப்படுவர் ;

(iii) அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் ஒருவருட காலம் முடிவடையும் வரை பதிற் கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கப்படுவர் ;

(iv) இப்பதவிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படும் சகல அலுவலர்களும் 3 வருட காலத்திற்குள் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும் ;

(v) தகுதிகாண் காலத்திற்கு அமைவாக சேர்த்துக்கொள்ளப் பட்ட புதிய அலுவலர்கள் நியமனஞ் செய்யப்பட்ட நாளிலிருந்து 03 வருட காலத்திற்குள் மேற்கூறப்பட்ட உறுதிப்படுத்தப்படுவதற்கான பரீட்சையில் சித்தி பெறத்தவறின் அவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவர் ;

(vi) பதிற்கடமையாற்றும் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப் படும் அரசாங்க அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து 3 வருட காலத்தினுள் மேற்குறிப்பிட்ட வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தி பெறத் தவறின் அரச சேவைகள் ஆணைக்குழுவின் உசிதாதாரத் திற்கிணங்க அவ்வலுவலரின் பதிற் கடமையாற்றும் காலம் 1 வருட காலத்தினால் நீடிக்கப்படும். அவ்வாறு நீடிக்கப்பட்ட காலத்தினுள்ளும் அலுவலர் மேற்குறிப்பிட்ட பரீட்சையில் சித்தியெய்தத் தவறின் அவர் முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்பப்படுவார் ;

(vii) பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அரச சேவையில் இருந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலருக்கு முன்னைய சேவையிலிருந்த அங்கத்துவம் இல்லாமல் போவதுடன், அச்சேவைக்கு மீளச் செல்லும் உரிமையும் அற்றுப் போகும்.

4. **சம்பளத்திட்டம்.**- (ரீபீ- 3-8), ரூபா 1,47,180 - 16 x 3,480 - ரூபா 2,02,860 (பொது நிருவாக சுற்றறிக்கை இல. 9/2004)

5. **வயதெல்லை.**- வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரச சேவை/மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

6. **கல்வித் தகைமைகள்.**- 2006.07.11 ஆந் திகதிக்கு கீழ் காணப்படும் தகுதிகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;-

6.1 ***வெளி விண்ணப்பதாரரர்கள்*** :- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் சட்டம் தொடர்பிலான பட்டதாரிகள் அல்லது சட்டக்கல்லூரியில் இறுதி சட்டப் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதுடன் சட்டத்தரணியாக தொழில் புரிய தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல்.

6.2 ***உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக :***

(அ) பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் III ஆம் தரத்தில் உறுதிப்படுத்தப் பட்டுள்ள அலுவலர்கள்:

(ஆ) அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் :-

(1) I ஆம் வகுப்பில், அல்லது

(2) அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 8 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள சேவையில் உறுதிப்படுத்தப் பட்டுள்ள அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் II ஆம் வகுப்பில் மூன்றாவது சம்பள ஏற்றத்தை அல்லது அதற்கு மேற்பட்ட சம்பள ஏற்றத்திற்கிணங்க சம்பளத் தினைப் பெறும் அலுவலர்கள், அல்லது

(3) அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றினைப் பெற்றுள்ளஅரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 03 வருடத்துக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்டுள்ள அலுவலர்கள்.

(இ) பதிவாளர் சேவையில் III ஆம் தரத்தில் இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சையில் சித்தியடைந்துள்ள மற்றும் அத்தரத்தில் எட்டு (08)வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தை மற்றும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு கிட்டி ஐந்து (05) வருடங்களை முழுமையாக பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள்.

6.3 ***தொழிற்பயிற்சி மற்றும் ஏனைய தகைமைகள் :***

(அ) அரச மொழியில் தேர்ச்சிப் பெற்றிருத்தல்.

(ஆ) பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அலுவல்கள் தொடர்பாக அனுபவமும், அறிவும்.

(இ) ஆங்கில மொழி தொடர்பான அறிவு பெற்றிருத்தல்.

7. **ஆட்சேர்ப்பு முறை:-**

7.1 *வெளி விண்ணப்பதாரர்கள்* :
7.2 *உள்ளக விண்ணப்பதாரர்கள்* :

(அ) 6.1 மற்றும் 6:2 இல் (அ), (ஆ) இற்குரிய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கோரப்படும் தினத்தில் உள்ள வெற்றிடங்களில் 75% ஆனது பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தகைமை பெற்றுள்ள வர்களினால் நிரப்பப்படும். சான்றிதழ்களை பரீட்சிப்பதற்காக மட்டும் நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

7.3 ***சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில்.***- 6:2 (இ) தகைமைகளை பூர்த்திசெய்துள்ள அலுவல்களின் நடைமுறையிலுள்ள வெற்றிடங்களில் 25% ஆனது மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் பூர்த்திசெய்யப்படும் தகைமைகளை பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிடங்கள் அனைத்தும் திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நிரப்பப்படும்.

அரச வர்த்தமானி அறிவித்தல்/பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பதிவாளர் சேவையில் III ஆம் தரத்தில் தகைமைகள் பெற்றுள்ள அலுவலர்களிலிருந்து அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் பரவலாக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையினூடாக தெரிவுசெய்யப்படுவதோடு அப் புள்ளி வழங்கும் அடிப்படையானது விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் உள்ளவாறாகும்.

8. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 350.00 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்திற்கு முன்னர் கச்சேரியில் அல்லது பொதுத் திறைசேரியில் அல்லது வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இன் கீழ் வைப்புச்செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் பத்திரத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீள செலுத்தப்படமாட்டாது.

9. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பப்பத்திரம் இவ்வறிவித்தலுடனான மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க அமைதல் வேண்டும். கடதாசியின் இரு புறத்தையும் பாவித்து A4 அளவிலான இருமடித்தாளில் விண்ணப்பதாரரின் கையெழுத்திலேயே நிரப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்பத்திரத்தை விண்ணப்பதாரர்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றத் தகுதிபெற்றுள்ள மொழியிலேயே நிரப்புதல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் 2006.07.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவு தபாலில் பத்தரமுல்ல, பெலவத்தையில் அமைந்துள்ள பரீட்சை திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் இடப்பட்டு அனுப்பப்படும் உறையின் மேல் மூலையில் "பதிவாளர் சேவையின் தரம் II பதவிகளுக்கு ஆட்களை சேர்த்துக்கொள்ளல்" என தெளிவாக

குறிப்பிடுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு**.- அரசாங்க சேவையில்/ உள்ளூராட்சி சேவையில் கடமையாற்றும் விண்ணபதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்கள்/ தாபனத் தலைவர்களினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஈ) அனைத்து வகைகளிலும் பூரணத்துவமற்ற விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையில் விண்ணப்பப் பத்திரங்கள் காணாமல் போகுதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் செய்யப்படும் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கான பிரவேசப் பத்திரம் பதிவுத் தபாலில் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு ஏழு தினங்களுக்கு முன்னர் பரீட்சை ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்படும். பரீட்சை நடைபெறும் தினத்திற்கு 07 தினங்களுக்கு முன்னர் பிரவேசப்பத்திரம் கிடைக்காதுவிடின் கீழ்குறிப்பிட்டுள்ள விபரங்களுடன் உடனடியாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும் :

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ;
(iii) முகவரி ;
(vi) விண்ணப்பப்பத்திரம் தபால் செய்யப்பட்ட தினம், தபால் பதிவு இலக்கம், தபால் அலுவலகம்.

10. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி**.- (i) விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்றுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிரவேசப் பத்திரம் வழங்கப் படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையத்தின் நிருவாகியிடம் தனது பிரவேசப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். தனது பிரவேசப் பத்திரத்தை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ii) அனைத்து பரீட்சார்த்திகளும் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பொதுச் சட்டத்திட்டங்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தியொருவருக்கு பிரவேசப்பத்திரம் வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்தவராக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையாக கணிக்கப் படமாட்டாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்தி தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிருவாகி திருப்திப்படும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு கீழ்குறிப்பிடப்படும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படும் ஆளடையாள அட்டை ;
(ii) வழங்கப்பட்ட திகதியானது பரீட்சை நடைபெறும் தினத்திற்கு 3 வருடம் மேற்படாதவாறாக செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(iii) தபால் மாஅதிபரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தபால் அடையாள அட்டை.

12. **உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்**.- பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவரென்பது கண்டுபிடிக்கப் படின், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் காலத்திலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்தி லாயினும் அவரது பரீட்சார்த்தித் தன்மையை நிராகரிப்பதற்கு இடமுண்டு. அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள பரீட்சார்த்தியொரு வரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமொரு விடயம் அவர் அதனை பொய் எனத் தெரிந்தும் சமர்ப்பித்துள்ளாரென்பது கண்டுபிடிக்கப் படின் அல்லது ஏதேனுமொரு முக்கிய விடயத்தை வேண்டுமென்றே அவர் மறைத்து இருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

13. இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய அலுவல்கள் கையாளப்படும்.

14. **பரீட்சைத் திட்டம்** :-

(i) ***மொழிமூலம்*** :

(அ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் ஏதேனுமொரு மொழியில் விண்ணப்பித்தல் முடியும்.

(ஆ) அனைத்து விண்ணபதாரர்களும் விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலத்திலேயே சகல வினாப் பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(இ) தனது விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு எந்தவொரு பரீட்சார்த் திக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(ii) ***பாடங்களும் பாடத்திட்டமும்*** :

(அ) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான எழுத்துமூல வினாப்பத்திரங்களைக் கொண்ட ஓர் பரீட்சை :-

| | பாடம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | ஆவணப்பதிவு | 11/2 மணித்தியாலங்கள் | 100 |
| (ii) | விவாகம், பிறப்பு, இறப்பு,பதிவு செய்தல் | 11/2 மணித்தியாலங்கள் | 100 |
| (iii) | அலுவலக முகாமைத்து வமும் தாபன அலுவல்களும் | 1 மணித்தியாலம் | 100 |
| (iv) | நிதி முகாமைத் துவம் | 1 மணித்தியாலம் | 100 |
| (v) | ஆங்கிலம் | 1 மணித்தியாலம் | 100 |

(ஆ) பாடத்திட்டம் :-

(1) *ஆவணப்பதிவு :*

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் மற்றும் பணிப்புரைகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவினை கணிப்பதற்காக தயாரிக்கப்பட்ட வினாப் பத்திரமொன்று,

* ஆவணப்பதிவு கட்டளைச் சட்டம்
* நொத்தாரிசு கட்டளைச் சட்டம்
* மோசடிகள் தவிர்ப்புச் சட்டம்
* முத்திரை வரிச் சட்டம்
* அற்றோனி தத்துவப் பத்திர கட்டளைச் சட்டம்
* இச்சட்டங்களின்கீழ்ஆக்கப்பட்ட பணிப்புரைகள்

(2) *விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு :*

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் மற்றும் பணிப்புரைகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவினை கணிப்பதற்காக தயாரிக்கப்பட்ட வினாப் பத்திரமொன்று :-

* விவாகப் பதிவு கட்டளைச் சட்டம்
* கண்டிய விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம்
* பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுச் சட்டம்
* முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம்
* இச்சட்டங்களின் கீழ் ஆக்கப்பட்ட பணிப்புரைகள்

(3) *அலுவலக முகாமைத்துவமும் தாபன அலுவல்களும் :*

கீழ்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவினை கணிக்குமுகமாக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமொன்று :-

(i) அரசாங்க நிருவாகத்தின் தன்மை.

(ii) *அமைப்பு வியூகம்.-* சிறந்த அமைப்பு பற்றிய கோட்பாடு, வேலைப் பகிர்வும் பணி ஒதுக்கீடும், வேலை இயைபுபடுத்தல் மேற்பார்வையின் தன்மை, நிருவாக கட்டுப்பாட்டு எல்லை, அலுவலர் குழாமுக்கிடையிலான தொடர்பு அதிகாரிகளின் வரிசைமுறை, அதிகார கையளிப்பு.

(iii) *நிருவாக நடைமுறையும் தீர்மானமெடுத்தலும்.-* பகுத்தறிவுடனான தீர்மானம் எடுத்தல், தற்றுணிபை பிரயோகித்தல், இயல்பான நிலையுடனான மதிப்பீட்டு தீர்ப்பு.

(iv) *தொடர்பிணைப்பு .-* அமைப்புகளுக்கிடையிலான செய்திப் பரிமாற்றம், தீர்மானமெடுத்தல் தொடர்பில் செய்திகளின் முக்கியத்துவம் அமைப்புக்குள்ளான தொடர்பிணைப்பின் தொழிற்பாடு, பொதுமக்கள் தொடர்பு செய்தித் தாள்களுடனான தொடர்புகள், பாராளுமன்றம் மற்றும் மாகாண சபை அமைச்சர்களுடனான தொடர்புகள்.

(v) *அலுவலக நடைமுறைகள்.-* அலுவலக நடைமுறைகள், அலுவலக ஒழுங்கு முறைகள் பற்றிய கோட்பாடுகள், நிலையியல் கட்டளைகள், அமைப்பு அட்டவணைகள், வேலை அட்டவணைகள், எழுதுநர் அலுவல்களுக்குரிய எழுத்துருவ விபரக்கூற்றுக்களும் நடைமுறை பட்டோலைகளும், வேலை ஆய்வு, ஒழுங்கு முறை ஆய்வு, வேலைக் கணிப்பு, வினைத்திறமைக் கணிப்பு.

(vi) *பதிவேடுகளும் கோப்பிடுதலும்.-* சிறந்த கோப்பிலிடும் ஒழுங்கு முறைகளின் இன்றியமையாத அம்சங்கள் கோப்பிலிடும் முறைகளும் சுட்டிலக்கம் இடும் முறைகளும், வகைப்படுத்தும் முறை, கேந்திர ரீதியிலான கோப்பிடுதல், கோப்பிடுதலும் கோப்பிடும் உபகரணங்களும், பதிவேடுகளைக் களஞ்சியப்படுத்துதல் பெறுமதியற்ற பதிவேடுகளை அப்புறப்படுத்தல்.

(vii) *படிவக் கட்டுப்பாடும் படிவ வடிவமைப்பும் .-* படிவக் கட்டுப்பாடு மற்றும் படிவ வடிவமைப்பின் நோக்கங்கள் தன்மை, மாதிரிக் கோவை அமைப்பும் உள்ளடக்கத்தின் தரமும், படிவத்தின் பருமனும் வர்க்கமும், படிவங்களை சிக்கனமாக பாவித்தல்.

(viii) *உள்முக அஞ்சலும் வெளிமுக அஞ்சலும்.-* தபால் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடைமுறைகள், அவசர கடிதங்கள், இரகசிய கடிதங்கள், தபால் மூலம் பணம் அனுப்புதல்.

(ix) *கடிதத் தொடர்பு.-* கடிதத் தொடர்பின் கட்டுப்பாடுகள், கடிதத் தொடர்பின் உத்திகள், வடிவக் கடிதங்கள், பாராளுமன்றத்தில் எழுப்பப்படும் வினாக்கள், திணைக்களங்களுக்கிடையிலான வரைபுக் கடிதங்கள், பாராளுமன்ற அமைச்சர்களுடனான கடிதத் தொடர்புகள்.

(x) *வேலைக் கட்டுப்பாடு.-* அலுவலர் குழாம் பற்றிய பரிசீலனை, அறிக்கை செய்யும் முறை வேலை ஆற்றலினை புள்ளிவிபரவியல் ரீதியாக கணிப்பீடு செய்தல்.

(xi) *அலுவலக உபகரணப் பயன்பாடு பற்றிய கட்டுப்பாடு.*- நிழற்பட பிரதி எடுக்கும் இயந்திரம், தட்டச்சுப்பொறி என்பவற்றை பேணுதலும் திருத்தலும் கணக்கு கட்டும், கணக்கிடும் பொறிகள், துளைஅட்டை (பன்ச் காட்) உபகரணங்கள், தொலைபேசி என்பன.

(xii) *அலுவலக தள அமைப்பும் சூழலும்.*- அலுவலக வளவினைப் பேணுதல், அலுவலக தள அமைப்பு, அலுவலக மரத்தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் என்பவற்றினை துப்பரவு செய்வதற்கான கட்டுப்பாட்டு நடைமுறைகள், பாதுகாப்பு வெளிச்சமிடலும் காற்றோட்டமும், அலுவலகங்களின் பாதுகாப்பு முற்காப்புகள்.

(xiii) *அரச சேவைகள் ஆணைக்குழுவினதும், பொது நிருவாக அமைச்சினதும் பணிகள்.*- அரசாங்க சேவைக்கு ஆட்சேர்த்தல், ஆட்சேர்ப்புத் திட்டங்கள்,பல்வேறு சேவைகள் பற்றிய பிரமாணக் குறிப்புகள், சேவை நிபந்தனைகள் தகுதிகாண் நிலை, சேவையினை உறுதிப் படுத்தல், வேதனவேற்றங்கள், பதவி யேற்றங்கள், ஓய்வுபெறல், கேட்டு விலகல் என்பன.

(xiv) வேலைப் பாகுபாடும் வேலை மதிப்பீடும்.

(xv) தொழிலாளர்களினதும், அலுவலக ஆளணி யினர்களினதும் வேலை திட்டங்களும், படிகளும், ஊதியங்களும்.

(xvi) பதவி நிலைகளின் பாகுபாடும் ஆளணியினரை தரப்படுத்தலும், பாகுபாடு செய்தல், சிறப்புத் தேர்ச்சியினை மதிப்பீடு செய்தல், ஊக்கத்திட் டங்களும் யோசனைத் திட்டங்களும்.

(xvii) ஆளணியினர்களைத் தெரிவு செய்தலும், நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தலும் உளச்சார்பு தெரிவுகள், நேர்முகப் பரீட்சை நடாத்தும் உத்திகள்.

(xviii) பெயர்வழிப் பதிவேடுகள், வரலாற்றுத் தாள்கள், ஆளணியினர்களை பணியில் அமர்த்துதல், இடமாற்றஞ் செய்தல்.

(xix) அலுவலர் குழாமின் நலனோம்புச் சேவைகள், ஓய்வூதியங்களும் பணிப்புரைகளும்.

(xx) பல்வேறு வகுதிகளைச் சேர்ந்த அரசாங்க அலுவலர்களின வேலை நேரம்.

(xxi) திடீர் விபத்து, லீவு, சயரோக லீவு போன்ற விசேட லீவுகள் உட்பட அரசாங்க சேவையில் உள்ள லீவுகள்.

(xxii) மேலதிக நேரக் கொடுப்பனவுகள்.

(xxiii) அரச அலுவலர்களுக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய கடன்களும் முற்பணங்களும்.

(xxiv) அரச அலுவலர்களுக்கான பிணை

(xxv) தொழிற் சங்கங்களின் பங்கு

(xxvi) அரசாங்க சேவையில் உள்ளோருக்கான கஷ்ட நஷ்டங்கள் தொடர்பான வழிமுறைகள்.

4. ***நிதி முகாமைத்துவம்.***- கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவை கணிப்பிடும் பொருட்டு தயாரிக்கப்பட்ட வினாத்தாளொன்று.-

(i) *வருடாந்த மதிப்பீடு.*- வருடாந்த மதிப்பீடும் வரவு செலவு ஆக்கம் பற்றிய அலுவல்களும் நி. பி. 71 இன் கீழ் குறைநிரப்பு மதிப்பீடு பற்றிய அலுவல்கள், செலவினக் கட்டுப்பாடு, பணம் செலவு செய்வதற்கும் கொடுப்பனவு செய்வதற்கும் அதிகாரமளித்தல்.

(ii) *ஒப்பந்தம் மற்றும் ரெண்டர்.*- ஒப்பந்தம் மற்றும் ரெண்டர் விதிகள் தொடர்பிலான பிரமாணங்கள்.

(iii) *வழங்கல்களும் சேவைகளும்.*- வழங்கல்களை (பொருட்கள்) கொள்வனவு செய்தல் சேவைகளை கோரிப்பெறுதல் மற்றும் கேள்வி கூற்று நடைமுறைகள் வழங்குநர்களின் விற்பனைச் சீட்டுக்களை நிவர்த்தி செய்தல்.

(iv) *பொருட்கள் கட்டுப்பாடு.*- வழங்கல்களை மதிப்பீடு செய்யும் முறை, பொருட்களுக்கான கேள்வி விண்ணப்பக்கூறு பணம் அறவிடுதல், சோதனை செய்தல். பொருட்களை களஞ்சியப்படுத்தல், விநியோ கித்தல் மற்றும் பொருட்கள் பற்றிய அறிக்கைகளைப் பேணுதல்.

(v) அரச கணக்குகள் குழுவினதும் திறைசேரியினதும் கணக்காய்வாளர் நாயகத்தினதும் பணிகள்.

(vi) பேரேடு, மாதாந்த செலவினத் திரட்டு, கட்டுநிதி.

5. **ஆங்கிலம்.**- ஆங்கில மொழியில் வெளியிடப்பட்ட இலங்கை சட்ட வாக்கியத்தை வாசித்து விளங்கிக் கொள்ளுதல் ;அத்துடன் ஆங்கில

மொழியில் கருத்துப் பரிமாறிக் கொள்ளுதல் பற்றிய பரீட்சார்த்தியினது அறிவைக் கணிப்பதற்கான கேள்விப் பத்திரமொன்று -

(i) ஆங்கில மொழியில் வெளியிடப்பட்ட இலங்கை சட்ட வாக்கியங்களை வாசித்து விளங்கிக் கொள்ளும் இயல்பு ;

(ii) ஆங்கில மொழியில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் இயல்பு.

அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகள் மாத்திரம் மேலிருந்து கீழிறங்கல் வரிசைக்கிரமத்தில் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். கல்விச்சான்றிதழ்கள், வேறு சேவைச் சான்றிதழ்கள் என்பன நேர்முகப் பரீட்சையின்போது பரீட்சித்துப் பார்க்கப்பட்டாலும் அவற்றுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. அவ்வாறு பரீட்சித்ததின் விளைவாக அவை உண்மையானவையென நிரூபணமாகிய விண்ணப்பதாரர்களிலிருந்து எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்படுவர்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

செயலாளர்,
பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 07,
2006.05.25.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு**

*பதிவாளர் சேவையில் தரம் II பதவிகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை*

(COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO THE POST OF REGISTRARS
(Grade II of the Registrar Service)

அலுவலக உபயோகத்திற்காக மட்டும்

| |
|---|
| |

பரீட்சையில் தோற்றுவதற்காக குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் மாற்றஞ் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.

| | |
|---|---|
| பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் | |

(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம்- 4)

(உரிய இலக்கத்தினை கூட்டினில் எழுதவும்.)

1\. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----.
உதாரணம் : MR./ MRS/ MISS SILVA, A. B.

(ii) முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----.

தேசிய அடையாள அட்டை இல. :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2\. முழு முகவரி :-

(i) தனிப்பட்ட (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----.

(ii) அலுவலக (ஆங்கில தனி எழுத்துக்களில்) :----.

(அரசாங்க சேவையில்/ மாகாண அரச சேவையில் கடமையாற்றும் அலுவலர் தனது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் மாற்றம் ஏற்பட்டிருப்பின் அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

3\. (i) பிறந்த திகதி :
ஆண்டு :----. மாதம் :----.திகதி :----.

(ii) 2006.07.11 ஆந் திகதிக்கு வயது :----.

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
(அரசாங்க சேவையாளர் அல்லாத பரீட்சார்த்திகள் பிறப்புச் சான்றிதழின் உண்மைப் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்.)

4\. பால் :----.
(பெண் - 1, ஆண் - 2)

(கூட்டிற்குள் உரிய இலக்கத்தை எழுதவும்)

5\. விவாகமானவரா அல்லது தனிநபரா? :-

விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2

6\. அரசாங்க சேவையாளர் அல்லாத பரீட்சார்த்திகள் பின்வரும் விபரங்களைத் தருக:-

(i) 6.1 பந்தியின்கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவராக காணப்படின் பெற்றுள்ள தகைமைகள் :----.
(இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையைப் பெற்றுள்ள பரீட்சை, தேர்ச்சி பெற்றமைக்காக பெற்றுக்கொண்ட பரீட்சைச் சான்றிதழின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைக்குக) :----.

(ii) அத்தகைமையினை பெற்றுக் கொண்ட நிறுவனம் :----.

7. அரச சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் பின்வரும் விபரங்களைத் தருக.

(அ) (i) 6.2 (அ) (ஆ) மற்றும் (இ) பந்திகளின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறும் பொருட்டு பெற்றுள்ள தகைமைகள் :-

(ii) அத்தகைமையினை பெற்றுக் கொண்ட நிறுவனம்:-

| சேவையாற்றியுள்ள திணைக்களம் | பதவி | முதல் | வரை | கால வரையறை |
|---|---|---|---|---|
| | | | | |

(ஆ) (i) சேவை/பதவி :----.
(**கவனிக்குக** :- பொ. எ. சே. வகுப்பு I என பதவியை தெளிவாக எழுதவும்).

(ii) 2006.07.11 ஆந் திகதிக்கு பெறும் வருடாந்த சம்பளம் ரூபா :----.

(iii) 2006.07.11 ஆந் திகதிக்கு அரசாங்கத்தின் கீழான முழு சேவைக்காலம் :----.

8. பற்றுச்சீட்டினை மீண்டும் கழற்றி எடுக்கமுடியாதவாறு பற்றுச்சீட்டின் ஒரு பகுதியை ஒழுங்காக ஒட்டவும்.

| |
|---|
| |

9. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவையெனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இல. ........................... உம் ........................ ஆந் திகதியும் கொண்ட பணப் பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதெனவும் உறுதிமொழிகிறேன். மேலும் பரீட்சை சட்டத்திட்டங்களின்படி செயலாற்றுவதற்கும், இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவரென்பது அறிய நேரிடின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது அதன் பின்னரோ எனது விண்ணபத்தை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும், நியமனம் கிடைத்தபின் அறிய நேரிடின் நட்டஈடுகள் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் நான் இணங்குகிறேன்.

----.
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தில் கடமையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ........................................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் 2006, .............................. மாதம் ........ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----.
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.

(விண்ணப்பதாரர் அரசாங்க அலுவலரொருவராயின், திணைக்களத் தலைவர் அல்லது உரிய பதவி நிலை அலுவலரினாலும், வெளி விண்ணப்பதாரராயின், அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை அதிபர் அல்லது அத்தகைய ஓய்வுபெற்ற அலுவலர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, அரச அல்லது உள்ளூராட்சி சேவையில் வருடாந்த சம்பளம் ரூபா 1,60,440 ஐ அல்லது அதற்கு மேல் பெறுவோர், பிரசித்த நொத்தாரிசு அல்லது மதகுரு அல்லது வழிப்பாட்டுத்தலத்திற்கு பொறுப்பான மதகுரு ஒருவரினாலும் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி .................................... இத்திணைக்களத்தில் கடமையாற்றுகிறார் எனவும் அவரின் வேலை, வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும் இப்பரீட்சை தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் எனவும் எச்சரிக்கை தவிர்ந்த எந்த முறையிலான தண்டனையையும் பெற்றுக் கொள்ளவில்லையென்பதையும் அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன்.

----.
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயரும் பதவியும் :----.
முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
திகதி :----.

6-338

## தொழில்சார், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கைநெறிகளுக்கு மாணவர்களை அனுமதித்தல்-2006-2007

இவ்வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கைநெறிகள் தொடர்பாக தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகளுள் அவர்கள் தகைமைகளுக்கும் திறமைகளுக்கும் அமைய கற்கைநெறிகளுக்குத் தேவையான எண்ணிக்கைகளுக்கும் ஏற்ப மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை இவ்வறிவித்தலில் காணப்படும் விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 13"x8" அளவிலான தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி (12) இல் கூறப்பட்டதற்கு இணங்க ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திலும் ரூபா 10 முத்திரை ஒட்டப்பட்டு, அதன்மேல் விண்ணப்பதாரர் தனது கையொப்பம் இடுவதன்மூலம் பெறுமதி நீக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2006.06.23 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில், உரிய தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இவ்விண்ணப்பங்களை இத்திணைக்களத்திற்கோ அல்லது அதிகாரியின் அலுவலக அல்லது சொந்த முகவரிக்கோ அனுப்ப வேண்டாம் என ஆலோசனை வழங்கப்படுகிறது.

3. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியின் பெயர், அதன் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

**உதாரணம் :** எந்திரவியல் படவரைபியலிலான தேசிய சான்றிதழ்-ETC 05.

4. குறிப்பிட்ட திகதிக்குப்பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. கற்கைநெறியின் பெயர், குறியீட்டு எண், பயிற்சி நெறியைத் தொடரவிருக்கும் தொழில்நுட்பக் கல்லூரி, போதனா மொழி என்பவற்றை சரிவரக் குறிப்பிடல் வேண்டும். கல்லூரி கற்கைநெறி போதனா மொழி என்பனவற்றை மாற்றுவதற்கான வேண்டுகோள் பின்னர் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.

6. சகல பகுதிநேர/மாலைநேர கற்கை நெறியைத் தொடருவோரிடமிருந்து கீழ் உள்ளவாறு கட்டணம் அறவிடப்படும் :

(1) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பகுதி நேர குறுங்கால/மாலை நேர சான்றிதழ் கற்கை நெறிகளுக்கு வருடமொன்றுக்கு ரூபா 2,000.

(2) ஒரு வருடம் அல்லது அதற்கு குறைந்த குறுங்கால/பகுதி நேர/மாலை நேர கற்கைநெறிகளுக்கு வருடமொன்றுக்கு ரூபா 1,500.

7. கற்கை நெறியின் இயல்பு, ஒவ்வொரு நெறிக்குமான தகைமை, ஊடக மொழி, அக்கற்கை நெறிகள் நடாத்தப்படும் தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியன தொடர்பாக இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள கற்கை நெறிகளின் அட்டவணைக்கு விண்ணப்பதாரர்கள் தமது அவதானத்தைச் செலுத்தும்படி கேட்கப்படுகின்றார்கள். கற்கை நெறிகள் நடாத்தப்படும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் விலாசம், தொழில்நுட்பக் கல்லூரிகளின் பட்டியலில் காட்டப்பட்டுள்ளது.

8. தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்கைநெறிகளைத் தொடர்வதற்கு அனுமதி கோரும் விண்ணப்பதாரிகள் :

(1) நற்பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(2) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போதே அனுமதிக்க வேண்டிய தகைமைகள் அனைத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

9. தகைமையுடையோர் உளச்சார்பு பரீட்சைப் பெறுபேறுடன் அல்லது/அத்துடன் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

10. ஆவணங்கள் எதுவும் அல்லது அவற்றின் பிரதிகள் எதுவும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகாது. தேர்வுப் பரீட்சையின்போது தேவையானதும், ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதுடன், தகைமைகளை நிரூபிக்கத் தவறும் விண்ணப்பதாரிகள் தகைமையற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

11. முழு நேரக் கற்கைநெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு தமது குடும்பப் பொருளாதார நிலைமைக்கேற்ப, கல்லூரி வகுப்புக்களுக்குச் சமுகமளிக்கும் நாளொன்றுக்கு ரூபா 20 வீதம் உதவிக் கொடுப்பனவானது மாதம் ஒன்றிற்கு ரூபா 450 இற்கு மேற்படாது வழங்கப்படும்.

முழு நேரக் கற்கை நெறியினைத் தொடரும் குறைந்த வருமானத்தைப் பெறும் மாணவ மாணவிகளில் 600 பேருக்கு ரூபா 2,500 வீதம் வருடமொன்றுக்கு மாணவ உதவு தொகையாக வழங்கப்படும்.

12. சகல ஆவணங்களின் நம்பகத்தன்மைக்கு விண்ணப்பதாரியே முழுப் பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மை உறுதிசெய்யத் தவறும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கும்போது வெவ்வேறு விண்ணப்பப்படிவங்களில் ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் தனித்தனியே விண்ணப்பிக்கலாம்.

(கலாநிதி) எச். எல். ஒபேயசேகர,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்.

த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

**தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப் பட்டியல்**

| தொடர் இல. | தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர் | விலாசம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி | ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 | கொழும்பு |
| 2. | காலி தொழில்நுட்பக் கல்லூரி | களுவெல்ல, காலி | காலி |
| 3. | கண்டி தொழில்நுட்பக் கல்லூரி | அறுப்பொல, கண்டி | கண்டி |
| 4. | யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி | பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |
| 5. | பதுளை தொழில்நுட்பக் கல்லூரி | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | பதுளை |
| 6. | கேகாலை தொழில்நுட்பக் கல்லூரி | கச்சேரி வீதி, கேகாலை | கேகாலை |
| 7. | அனுராதபுரம் தொழில்நுட்பக் கல்லூரி | புதிய நகரம், அனுராதபுரம் | அனுராதபுரம் |
| 8. | குருநாகல் தொழில்நுட்பக் கல்லூரி | புத்தளம் வீதி, குருநாகல் | குருநாகல் |
| 9. | இரத்மலானை தொழில்நுட்பக் கல்லூரி | காலி வீதி, இரத்மலானை | கொழும்பு |
| 10. | அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி | இகினியாகல வீதி, அம்பாறை | அம்பாறை |
| 11. | மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரி | மெத்தவத்தை, மாத்தறை | மாத்தறை |
| 12. | சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி | அம்பாறை வீதி, சம்மாந்துறை | சம்மாந்துறை |
| 13. | களுத்துறை தொழில்நுட்பக் கல்லூரி | களமுல்ல, களுத்துறை | களுத்துறை |
| 14. | இரத்தினபுரி தொழில்நுட்பக் கல்லூரி | பாம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 15. | வறக்காப்பொல தொழில்நுட்பக் கல்லூரி | அம்பகல வீதி, வறக்காப்பொல | கேகாலை |
| 16. | குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரி | பன்னல வீதி, குளியாப்பிட்டிய | குருநாகல் |
| 17. | பாத்ததும்பறை தொழில்நுட்பக் கல்லூரி | நவயாலதென்ன, கட்டுகஸ்தொட்ட | கண்டி |
| 18. | நுவரெலியா தொழில்நுட்பக் கல்லூரி | ஜயதிலக்க மாவத்தை, நுவரெலியா | நுவரெலியா |
| 19. | ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி | கொடகம, ஹோமாகம | கொழும்பு |
| 20. | பெலியத்த தொழில்நுட்பக் கல்லூரி | புவக்தண்டாவ, பெலியத்த | ஹம்பாந்தோட்டை |
| 21. | ஹசலக தொழில்நுட்பக் கல்லூரி | யோத எல வீதி, ஹசலக | கண்டி |

| தொடர் இல. | தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர் | விலாசம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 22. | தம்புள்ள தொழில்நுட்பக் கல்லூரி | மாத்தளை வீதி, தம்புள்ள | மாத்தளை |
| 23. | பலப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரி | வந்தது்வ புகையிரத வீதி, பலப்பிட்டிய | காலி |
| 24. | வாரியப்பொல தொழில்நுட்பக் கல்லூரி | சிலாபம் வீதி, வாரியப்பொல | குருநாகல் |
| 25. | மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி | மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| 26. | பண்டாரவளை தொழில்நுட்பக் கல்லூரி | வேவதன்ன, பண்டாரவளை | பதுளை |
| 27. | மொனராகலை தொழில்நுட்பக் கல்லூரி | சிறிகல, மொனராகலை | மொனராகலை |
| 28. | கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரி | வெரல்லவத்தை, யக்கலை | கம்பஹா |
| 29. | திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரி | மிஹிந்துபுர, திருகோணமலை | திருகோணமலை |
| 30. | தெஹியத்தகண்டிய தொழில்நுட்பக் கல்லூரி | மஹனாவெல, தெஹியத்தகண்டிய | அம்பாறை |
| 31. | மாத்தளை தொழில்நுட்பக் கல்லூரி | எம். சீ. வீதி, மாத்தளை | மாத்தளை |
| 32. | வீரவில தொழில்நுட்பக் கல்லூரி | புதிய நகரம், வீரவில | ஹம்பாந்தோட்டை |
| 33. | மெதகம தொழில்நுட்பக் கல்லூரி | மெதகம | மொனராகலை |
| 34. | பொலன்னறுவை தொழில்நுட்பக் கல்லூரி | வித்தியாபுர, பொலன்னறுவை | பொலன்னறுவை |
| 35. | எம்பிலிப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரி | புதிய நகரம், எம்பிலிப்பிட்டிய | இரத்தினபுரி |
| 36. | வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி | மன்னார் வீதி, வவுனியா | வவுனியா |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதிபெறுவதற்கான விண்ணப்பம்-2006/2007**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும்.
தொழில்நுட்பக் கல்லூரிகளின் முகவரிகள் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப்பட்டியலில் உள்ளன.
(ஒவ்வொரு கற்கைநெறிக்கும் வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.)

1. தொழில்நுட்பக் கல்லூரியின் பெயர்/பயிற்சி நிலையம் :----.

2. கற்கைநெறியின் பெயர் :----------------------------------------------------------------. (முழு நேரம் பகல்/மாலை/பகுதி நேரம்)
போதனா மொழி :----. குறியீட்டு இல. :----.

3. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் :----.

4. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்/பெயர்கள் :----.

5. நிரந்தர முகவரி :----.

6. தேசிய அடையாள அட்டை இல. :----.

7. மாவட்டம் :----. தேர்தல் தொகுதி :----. கிராம அலுவலர் பிரிவு :----.

8. பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

2006.01.01 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

9. பால் : (ஆண்/பெண் ) :----.

10. கல்வித் தகைமைகள் :-

(அ) க. பொ. த. (சா. த.) பெறுபேறுகள்- (இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல்) :-

| சுட்டிலக்கம் | வருடம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ஆ) க. பொ. த. (உயர் தர) பெறுபேறுகள் - (ஒரு தடவை மட்டும்) :----.

| சுட்டிலக்கம் | வருடம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(இ) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் தோற்றிய தடவைகள் :----.

(ஈ) மேற்குறிப்பிட்ட (அ) இல் தகைமைகள் இல்லையாயின்-
சித்தியடைந்துள்ள உயர் தரம் :----. ஆண்டு :----.

11. மாலை நேர மற்றும் பகுதி நேர கற்கை நெறிகளுக்கு மட்டும்:

(தொழில் புரிபவர்களுக்கென கோரப்பட்ட கற்கைநெறியைப் பின்பற்ற விண்ணப்பிப்போரால் மட்டும் நிரப்பப்பட வேண்டியது.)

11.1 விண்ணப்பதாரியின் பெயர் :----.

11.2 தற்போதைய பதவியும் இப்பதவிக்கு நியமனம்பெற்ற திகதியும் :----.
சுய தொழிலில் ஈடுபட்டிருந்தால் அதன் இயல்பு :----.

11.3 வேலை செய்யும் இடமும் முகவரியும் :----.

11.4 ஊழியர் சேமலாப நிதி இலக்கம் (EPF) :----.
ஊழியர் நம்பிக்கை நிதிய இலக்கம் (ETF) :----.

மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரி இந்நிறுவனத்தில்/அலுவலகத்தில் தொழில் புரிகிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

11.5 தொழில் தருநரின் பெயர் :----.

11.6 பதவி :----.

11.7 கையொப்பம் :----, பதவி முத்திரை :----.

11.8 திகதி :----.

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை.- இப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு உட்பட்ட வரையில் உண்மையானவை என்றும் விண்ணப்பித்துள்ள பயிற்சிநெறிக்கு வேண்டிய தகைமைகள் எனக்கு உண்டு என்றும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

5-B 079269

மேலும் தொழில்நுட்பக் கல்லூரிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் திட்டத்திற்கு இணங்குவேன் என்றும் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது முடிவே இறுதியானது எனவும் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

ரூபா 10/= பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன்மேல் கையொப்பமிட்டு பெறுமதி நீக்கம் செய்யவும்.

**தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்படும் கற்கை நெறிகளின் அட்டவணை - 2006/2007**
**எந்திரவியல் தொழில் நுட்பக்கற்கை நெறிகள் (முழுநேரம்)**

| தொடர் இல. | குறியீட்டு எண் | கற்கைநெறியின் பெயரும் இயல்பும் | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | கற்கைநெறி நடைபெறும் தொழில் நுட்பக் கல்லூரிகளும் ஊடக மொழியும் |
|---|---|---|---|---|
